**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 304/2017**

Prosecution witness : 3

| | | | |
|---|---|---|---|
| Name: | ஆனந்த் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 21.01.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது உசிலம்பட்டி வட்ட காவல்ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 08.10.2014 ம் தேதி நான் தேனி நுண்ணறிவுப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது எனக்கு கிடைத்த தேனி நுண்ணறிவுப்பிரிவு குற்ற எண்.139/2014, சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) NDPS ACT வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துகொண்டு வழக்கு சொத்தை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி RPR No.272/2014 பெற்றேன். 09.10.2014 ம் தேதி இந்த வழக்கு சொத்தினை தலைமைக்காவலர் -1446-திரு.முத்துராஜ் என்பவர் மூலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்றேன். அறிக்கை அளித்த பகுப்பாய்வாளர் திரு.ராமச்சந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு சொத்தின் RPR No அளித்த ஜவகர்லால் நேரு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் சாட்சிகள் சார்பு ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடம் கூறியதால் அவர்களுக்கு தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கின்

விசாரணையை முடித்து 05.11.2014 ம் தேதி வழக்கின் எதிரி முருகன் என்ற பொழி முருகன் என்பவர் மீது 8(c) r/w 20(b)(ii)(B) NDPS ACT ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். காவல் ஆய்வாளர் அவர்கள் பகுப்பாய்வு செய்யக்கோரி நீதிமன்றத்திற்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.9** ஆகும். கைப்பற்றிய சொத்தினை பகுப்பாய்வு செய்யக்கோரி தடய அறிவியல் ஆய்வகத்திற்கு நீதிமன்றம் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.10 ஆகும். பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ. 11 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் கைப்பற்றுதல் மற்றும் கைது குறித்து பிரிவு57 ன் படியான விரிவான அறிக்கை எதுவும் சார்பு ஆய்வாளர் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது விசாரணை வாக்குமூலத்தில் சார்பு ஆய்வாளர்-மூவேந்திரன் அவருக்கு வந்ததாக சொன்ன தகவலை தனி தாளில் பதிவு செய்ததாகவோ அதனை அவர்களது உயர் அதிகாரிக்கு எழுத்துபூர்வமாக அனுப்பிவைத்ததாகவோ, அவர் உயர் அதிகாரி அதை பெற்றுக்கொண்டதாக எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட வில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் பொதுநாட்குறிப்பின் நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு 14.09.2014 ல் கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருட்கள் 08.10.2014 சுமார் 23 நாட்கள் கழித்து ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் சான்றுப்பொருட்கள் எங்கிருந்தது, யார் வசம் இருந்தது பற்றி எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது விசாரணை வாக்குமூலத்தில் திரு.ஜவகர்லால் நேரு 08.10.2014 ம் தேதி முத்துராஜ் அவர்களிடம் பகுப்பாய்வுக்கான மாதிரிகள் ஒப்படைக்கப்பட்டதாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். பகுப்பாய்வாளர் திரு.ராமச்சந்திரன் அவர்கள் மேற்படி சான்றுப்பொருட்களை 10.10.2014 ம் தேதி தான் பெற்றுக்கொண்டதாக எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 10.10.2014 ம் தேதி பணியில் இருந்தபோது கனம் கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் முதன்மை மாவட்ட நீதிமன்றத்திலிருந்து க/எண்.1100, நாள்,08.10.2014 என்ற குறிப்பிட்ட கடிதத்துடன் நீதிமன்ற முத்திரை சரியாகவும், முழுமையாகவும் மூடி முத்திரை இடப்பட்டு தேனி

நுண்ணறிவுப்பிரிவில் பணி புரியும் தலைமைக்காவலர் திரு.முத்துராஜ் என்பவர் மூலம் பெறப்பட்டது. எனது விசாரணையில் முத்துராஜ் என்பவர் 08.10.2014 ல் வாங்கப்பட்ட மேற்சொன்ன மாதிரிகள் 10.10.2014 வரை எங்கிருந்தது, யார் வசம் இருந்தது என்பது குறித்து எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த இரண்டு நாட்கள் எங்கிருந்தது என்பது பற்றிய எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பகுப்பாய்வு அறிக்கை ஆய்வுக்கூடத்திலிருந்து நேரடியாக எங்களது காவல்நிலையத்தில் பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் மேற்படி ஆய்வு அறிக்கையானது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. மேற்படி ராமச்சந்திரன் எத்தனை சதவீதம் கெனபினாய்டுகள் இருந்தது குறித்து எனது விசாரணை வாக்குமூலத்திலோ, பகுப்பாய்வு அறிக்கையிலோ கூறப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பகுப்பாய்வு அறிக்கையில் சோதனைகள் செய்தது பற்றி கூறியுள்ளார். புறச்சோதனைகள் -விடை அளித்தது -நுண்உறுப்பெருக்கி மூலம் விடையளித்தது, வேதியல் நிரம்பிய சோதனை -விடையளித்தது. TLC முறை விடையளித்தது. மேற்படி சோதனையில் எவ்வளவு சதவீத கெனபினாய்டுகள் இருந்து என்பது பற்றி சதவீத அளவில் குறிப்பிடாமல் கெனபினாய்டுகள் கஞ்சாவில் வேதியல் நுண்பொருளாகும் என்று குறிப்பிட்டுள்ளார். மேற்சொன்ன நான்கு சோதனைகளையும் தான் செய்ததாக பகுப்பாய்வாளர் ராமச்சந்திரன் எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தடய சொத்தானது கஞ்சா என்ற போதைப்பொருள் என சான்று அளித்தாக வாக்குமூலத்தில் கூறியுள்ளார். எனது விசாரணை வாக்குமூலத்தில் புறச்சோதனைகள், நுண்ணஉருப்பெருக்கி மூலம், வேதியல் நிரப்பு சேதனை மற்றும் TLC முறையில் சோதனை செய்யதாக விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. அவர் தடய சொத்தினை வேதியியல் பகுப்பாய்வு செய்ததில் மேற்படி தடய சொத்தில் கெனபினாய்டுகள் இருப்பது கண்டறியப்பட்டது. அத்தாட்சியில் மாதிரிகளில் S1 , S2 என குறியீடு செய்து அதில் NIB சீல் வைத்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் என்னால் குறியீடு செய்யப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையில் NIB சீல் இருந்ததாக குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமான பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்கின் குற்றப்பத்திரிக்கை சுமார் 3

வருடங்களுக்கு பின்னர் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் உள்ள குற்ற இறுதி அறிக்கையில் 03.11.2017 ம் தேதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன தேதி, நேரத்தில் சார்பு ஆய்வாளருக்கு எந்தவித தகவலும் வரவில்லை என்றாலும் அதன் பேரில் எந்த வித ரோந்து நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு அதற்கு ஆதரவாக சரிவர புலன்விசாரணை செய்யாமல் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், வழக்கு சொத்திற்கும், எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என்னால் குறியீடு செய்யப்பட்ட பகுப்பாய்வு அறிக்கை நிலையானதல்ல என்றால் சரியல்ல.